NEWS18 தமிழ்

# தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் - அதிகாரிகளுக்கு அவகாசம் வழங்கிய சென்னை உயர்நீதிமன்றம்

LAST UPDATED : APRIL 25, 2024, 7:38 PM IST



Thoothukudi firing incident - Time off for authorities.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையத்தின் உத்தரவை எதிர்த்த வழக்கில், எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்ட அதிகாரிகள் பதில் மனுத்தாக்கல் செய்ய அவகாசம் வழங்கியது உயர்நீதிமன்றம்

படிக்கவும் ...

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கை முடித்து வைத்த தேசிய மனித உரிமை ஆணையத்தின் உத்தரவை எதிர்த்த வழக்கில், எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்ட அதிகாரிகள் பதில் மனுத்தாக்கல் செய்ய ஜூன் 7ம் தேதி வரை அவகாசம் வழங்கி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்துக்கு எதிராக கடந்த 2018ம் ஆண்டு மே 22ம் தேதி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், 13 பேர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கை, முடித்து வைத்ததை எதிர்த்து, மனித உரிமை ஆர்வலர் ஹென்றி திபேன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்துக்கு எதிராக கடந்த 2018ம் ஆண்டு மே 22ம் தேதி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், 13 பேர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கை, முடித்து வைத்ததை எதிர்த்து, மனித உரிமை ஆர்வலர் ஹென்றி திபேன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இதையடுத்து, எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்ட அதிகாரிகள் அனைவரும், ஜூன் 7ம் தேதிக்குள் பதில்மனு தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை ஜூன்18ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

https://tamil.news18.com/tamil-nadu/thoothukudi-firing-incident-time-off-for-authorities-1428119.html